தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.07.2024 முதல் 07.07.2024)

அறிக்கைஎண்: 27/2024 தேதி : 02.07.2024

## அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31 - 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது

## அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (03.07.2024 முதல் 07.07.2024).

| கடந்த வார வானிலை (28.06.2024 முதல் 01.07.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (03.07.2024 முதல் 07.07.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 28/06 | நாள்-2 29/06 | நாள்-3 30/06 | நாள்-4 01/07 | தேதி | நாள்-1 03/07 | நாள்-2 04/07 | நாள்-3 05/07 | நாள்-4 06/07 | நாள்-5 07/07 |
| 0.0 | 0.0 | 0.0 | 6.4 | மழை (மி.மீ.) | 0 | 1 | 0 | 0 | 1 |
| 31 | 37 | 38 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 36 | 36 | 36 |
| 26 | 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 26 | 26 | 25 |
| 6 | 5 | 7 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 6 | 5 | 8 |
| 72-56 | 73-47 | 77-73 | 74-56 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-30 | 70-30 | 60-40 | 60-40 | 60-40 |
| 7 | 15 | 18 | 20 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 18 | 22 | 16 | 12 |
| தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் கிழக்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | மேற்கு தென் மேற்கு | தெற்கு | மேற்கு தென் மேற்கு |

## அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 04.07.2024 மற்றும் 07.07.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 - 40 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14 - 22 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | வானிலையை கருத்தில் கொண்டு, குறுவை நெற்பயிரில் முதல் கைக்களையை 20 – 25 நாட்களுக்குள் எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது உள்ள தட்பவெப்பநிலையின் காரணமாக பருத்தியில் வளர்ச்சி குன்றி சிவப்பு நிற இலைகள் தோன்றுவதற்க்கு காரணமான மெக்னிசீயம் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இலை வழி தெளிப்பாக 2% மெக்னிசீயம் சல்பேட், 1% யூரியா மற்றும் 0.1% சிங் சல்பேட் தெளிக்க வேண்டும். |
| தென்னை | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | மாடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கால்நடைகள் மற்றும் கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் வருவதற்க்கு வாய்ப்புள்ளது எனவே கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும்

.

**இயக்குநர்**